
# திராவிடத்தால் வாழ்கிறோம்

877

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

126

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

## ‘எளிமை ஆளுமை’ திட்டம்!

### இணைய வழியில் விரையும் சேவைகள்!





2025-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அரசு நிர்வாக நடைமுறைகளை, சேவைகளை எளிமையாக்குவதற்கான அறிவிப்புகளை வெளியிட்டார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். இணைய வழியில் அரசு சேவைகளை விரைவாகவும் எளிமையாகவும் பெறுவதற்கான அந்த அறிவிப்பில், வரும் நிதியாண்டிலேயே பல்வேறு துறைகளின் 150 சேவைகளை இணைய வழியில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்தார்.

நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, அடுத்த சில மாதங்களிலேயே மனிதவள மேலாண்மைத் துறை சார்பில், ‘எளிமை ஆளுமை’ என்ற அந்தத் திட்டத்தினை 29-05-2025 அன்று தலைமைச் செயலகத்தில் இருந்து முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

பல சான்றிதழ்களை வாங்குவதற்கு தற்போது நடைமுறையில் உள்ள நேரடி ஆய்வுகள், ஆவணச் சரிபார்ப்பு போன்ற முறைகளுக்கு மாற்றாக சுய சான்றிதழ், இணைய வழி அறிதல் (KYC ) டிஜிட்டல் கையொப்பம் என பல வழிகள் இந்த ‘எளிமை ஆளுமை’ திட்டத்தில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. இதன் மூலம் பொதுமக்களும், தொழில் நிறுவனங்களும் எளிமையாக்கப்பட்ட அரசு சேவைகளை, விரைவாகப் பெற வழி ஏற்பட்டுள்ளது.

**முதற்கட்டமாக 10 சேவைகள்**

இலக்கு வைக்கப்பட்டுள்ள 150 சேவைகளில், முதற்கட்டமாக 10 சேவைகளுக்கான அனுமதியை எளிமையாக்கியுள்ளது தமிழ்நாடு அரசு.

குறிப்பாக, அரசால் வழங்கப்படும் சுகாதாரச் சான்றிதழ், பொது கட்டட உரிமம், மகளிருக்கான தங்கும் விடுதிகள் உரிமம், மகளிர் இல்லங்கள் உரிமம், புன்செய் நிலங்களை விவசாயம் அல்லாத செயல்பாட்டிற்குப் பயன்படுத்த தடையின்மைச் சான்றிதழ், சொத்து மதிப்புச் சான்றிதழ், முதியோர் இல்லங்கள் உரிமம், வெள்ளை வகை தொழிற்சாலைகள் பட்டியல், பணிபுரியும் நன்னடத்தைச் சான்றிதழ், அரசாங்க ஊழியர்கள் கடவுச்சீட்டு பெறுவதற்கான தடையின்மைச் சான்றிதழ் ஆகிய பத்து சேவைகளின் நடைமுறைகள் எளிமையாக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்த 10 சேவைகளில் நடைமுறையில் உள்ள சிக்கல்களை ஆராய்ந்து, அவற்றில் உள்ள முக்கிய விதிமுறைகளைச் சீர்செய்து, இணையவழியில் மக்கள் எளிதாகப் பயன்படுத்தும் வகையில், இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதனைக் குறிக்கும் வகையில்தான், ‘எளிமை ஆளுமை’ என பெயர் வைக்கப்பட்டுள்ளது.

*1.சுகாதாரச் சான்றிதழ் (Sanitation Certificate):*

முன்னதாக சுகாதாரச் சான்றிதழ் பெற மூன்று மாதங்கள் வரை மக்கள் காத்திருக்க வேண்டி இருந்தது. தற்போது அதனை எளிமையாக்கி ஒரே நாளில் பெற்றுக் கொள்ளும்படி நடைமுறைகள் எளிமையாக்கப்பட்டுள்ளன.

***2 பொது கட்டட உரிமம் (PUBLIC Buildings License):***

3 ஆண்டுகளாக வழங்கப்பட்டு வந்த பொது கட்டட உரிமைச் சான்றிதழ் தற்போது, கட்டடத்தின் உறுதித்தன்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்ட காலம் வரை உரிமம் செல்லுபடியாகும்படி, மாற்றி அமைக்கப் பட்டுள்ளது. முன்னதாக இந்தச் சான்றிதழ் பெற 3 முதல் 6 மாதங்கள் வரை ஆகும்.

***3. முதியோர் இல்லங்கள் உரிமம் (Registration of Old Age Homes):***

முதியோர்களைப் பராமரிக்கும் வகையில், புதிய முதியோர் இல்லங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க, அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் புதிய முதியோர் இல்லங்களை உருவாக்க முயற்சி செய்தால் அதை ஊக்குவிக்கும் வகையில், பதிவு செயல்முறை தற்போது முழுமையாக மின்னணு மயமாக்கப்பட்டுள்ளது. முன்னதாக இதன் உரிமம் பெற 6 முதல் 8 மாதங்களாக இருந்த நிலையில், தற்போது ஒரே நாளில் பெற்றுக்கொள்ள முடியும்.

***4 & 5. பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் உரிமம் மற்றும் மகளிர் இல்லங்கள் உரிமம் (Registration of Homes for Women):***

மகளிர் இல்லங்களைப் பதிவு செய்யும் முறை முன்பு கடினமாக இருந்தது. அவற்றை எளிமையாக்கி, பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் உரிமத்திற்கான கால வரம்பு 3 ஆண்டுகளில் இருந்து 10 ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டு QR குறியீட்டுடன் இணையதளத்தில் உடனடியாக வழங்கப்படுகிறது. முன்னதாக இந்த உரிமம் பெற 6 மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை என இருந்த நிலையை மாற்றி, தற்போது இதனையும் ஒரே நாளில் பெற்றுக் கொள்ள வழிகை செய்யப்பட்டுள்ளது.

***6. சொத்து மதிப்புச் சான்றிதழ் (Solvency Certificate):***

பெரும்பாலும் நிலத்தின் மதிப்பை அடிப்படையாகக் கொண்டே சொத்து மதிப்புச் சான்றிதழ் வழங்கப்படும். வங்கி இருப்புநிலை அறிக்கை, பட்டயக்கணக்கர் சான்றிதழ் (Auditor's Certificate), வருமானவரி தாக்கல் போன்ற பல்வேறு மாற்று வழிகள் தற்போது உள்ள நிலையில் சொத்து மதிப்புச் சான்றிதழ் நீக்கப்படுகிறது.

> **பல துறைகளின் சேவைகளையும் இணைய வழியில் எளிமையாக்க இலக்கு வைத்துள்ளது திராவிட மாடல் அரசு. எளிமையான, விரைவான சேவைகள், விவேகமான அரசுக்குச் சான்று.**

***7.வெள்ளை வகை தொழிற்சாலைகள் பட்டியல் விரிவாக்கம் (List of White Category Industries under TNPCB) :***

மாசுபடுத்தாதவை அல்லது குறைந்த மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் வெள்ளை வகை தொழிற்சாலைகள் என அங்கீகரிக்கப்படுகின்றன. முன்பு இந்த வெள்ளை வகை பட்டியலில் 37 தொழிற்சாலைகள் மட்டுமே இருந்தன. இது தற்போது 609-ஆக அவை விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இந்தத் தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் அனுமதி மற்றும் வழக்கமான ஆய்வுச் சுமைகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது நிலையான தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவித்து, வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

***8. விவசாயம் அல்லாத செயல்பாட்டிற்கு புன்செய் நிலங்களைப் பயன்படுத்த தடையின்மைச் சான்றிதழ்:***

புன்செய் நிலத்தை விவசாயம் அல்லாத பிற தேவைகளுக்குப் பயன்படுத்த, வேளாண்மைத் துறையிடம் தடையின்மைச் சான்றிதழ் (NOC) பெறுவது கட்டாயமாக இருந்தது. இது தற்போது இணையவழியில் (end-to-end digital process) மாற்றப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் சுய சான்றளிக்கப்பட்ட ஆவணங்களை இணைய வழியில் தாங்களாகவே சமர்ப்பிக்கலாம்.

***9. நன்னடத்தைச் சான்றிதழ், நன்னடத்தை மற்றும் பின்னணி சரிபார்ப்புச் சான்றிதழ் :***

முன்பைவிட, விரைவாக இந்தச் சான்றிதழ்களைத் தற்போது இணையவழியில் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ள முடியும்.

***10. அரசாங்க ஊழியர்கள் கடவுச்சீட்டு பெறுவதற்கான தடையின்மைச் சான்றிதழ்:***

அரசு ஊழியர்கள் கடவுச்சீட்டு பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது முன்பு பல்வேறு நடவடிக்கைகள் புழக்கத்தில் இருந்தன. தற்போது, அவை எளிமையாக்கப்பட்டு, முன்பு இருந்தவைகளில் ஏதேனும் ஒன்றை மட்டும் பூர்த்தி செய்தால் போதும். சம்பந்தப்பட்ட துறையின் மேல் அதிகாரிக்கு முன் தகவல் கடிதம் அளிக்கும் முறை மட்டும் பின்பற்றப்படும்.

இவ்வாறு நடப்பாண்டில் பல துறைகளின் சேவைகளையும் இணைய வழியில் எளிமையாக்க இலக்கு வைத்துள்ளது திராவிட மாடல் அரசு. எளிமையான, விரைவான சேவைகள், விவேகமான அரசுக்குச் சான்று.

**...சாதனை தொடரும்**

## ஆங்கிலம் அவமானம்; சமஸ்கிருதம் ஆனந்தமா?

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, சமீபத்தில் டெல்லியில் நடந்த புத்தக வெளியீட்டு விழாவில் பேசும்போது, “ஆங்கிலம் கற்பதும், பேசுவதும் அவமானம் என்று கருதும் நிலை விரைவில் இந்தியாவில் வரும்” என்று கூறியிருக்கிறார்.

இதுதொடர்பாக, தனது சமூக வலைத்தளப் பக்கங்களில் பதிவிட்டுள்ள, திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப வீரபாண்டியன், “அமித் ஷா-வின் இந்தக் கூற்று, எதிர்காலத்தில் அவர்கள் ஏற்படுத்த விரும்பும் பல ஆபத்துகளைச் சுட்டிக்காட்டுகிறது! இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வருவதுதான் அவர்கள் நோக்கம். குறிப்பாக, இந்தியாவின் உச்ச நீதிமன்றத்திலும், அனைத்து உயர் நீதிமன்றங்களிலும் ஆங்கிலம் மட்டுமே அலுவல் மொழியாக இருக்கும் என்று சட்டப்பிரிவு 348-(1)-(A) சொல்கிறது.

அதனுடைய உட்பிரிவாக, உயர் நீதிமன்றங்களில் மட்டும் குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்று, இந்தி அல்லது வேறு ஒரு மொழியை, அந்த மாநில ஆளுநர் பரிந்துரைக்கலாம் என்று இருக்கிறது.

இதனை அடியோடு மாற்றிவிட்டு, இந்தியை மட்டுமே இந்தியா முழுவதும் வழக்காடு மன்ற மொழியாக, அலுவலக மொழியாக ஆக்குவதற்கு முயற்சி நடந்து கொண்டிருக்கிறது என்பதே அமித் ஷா பேச்சின் உட்பொருள்! இந்தியைத் திணிப்பது என்பது கூட, எதிர்காலத்தில் சமஸ்கிருதத்தைக் கொண்டு வருவதற்காகத்தான்.

ஆங்கிலம் என்னும் அந்நிய மொழியை அகற்றிவிட்டு, இந்திய மொழிகளில் ஒன்றான இந்தியைக் கொண்டு வருவதில் என்ன பிழை என்று சிலர் கேட்கின்றனர். மொழிகளில் இரண்டு வகைகள்தாம் உண்டு! ஒன்று தாய் மொழி, இன்னொன்று அந்நிய மொழி! இந்த அந்நிய மொழிகளுக்குள், அருகில் உள்ள அந்நிய மொழி, தொலைவில் உள்ள அந்நிய மொழி என்கிற வேறுபாடெல்லாம் இருக்க முடியாது!

நம்மை ஏற்றி விடுகிறது ஆங்கிலம்! நம் மீது ஏறி மிதிக்கிறது சமஸ்கிருதம்! எனவே, ஆங்கிலத்தில் பேசுவது அவமானம் இல்லை! அமித் ஷா போன்றவர்கள் இந்த நாட்டை ஆள்வதுதான் அவமானம்!” எனக் கூறியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### வாழவைத்துக் கொண்டிருக்கும் தலைவரின் வாழ்த்து!



வழக்கறிஞர் செ.சரவணன்

2012-ஆம் ஆண்டு, நாகர்கோவில் வழக்கறிஞர் சங்க செயற்குழுவுக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டதும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்து பெற விரும்பினேன். சென்னை வந்து, கோபாலபுரம் இல்லத்தில் தலைவரை வணங்கி விவரத்தைச் சொன்னதும் “வாழ்த்துகள், மென்மேலும் வளரவேண்டும்” என வாழ்த்தினார். தலைவரின் வாழ்த்து, இன்றைக்கும் என்னை வாழ வைக்கிறது, என்றைக்கும் என்னை வாழவைக்கும்.

**– வழக்கறிஞர் செ.சரவணன்,**
**இளைஞர் அணி துணை அமைப்பாளர்,**
**கன்னியாகுமரி கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நல்வருக

### அனைவருக்கும் உயர்கல்வி!

1940-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24, 25 ஆகிய இரண்டு நாட்கள் நீதிக்கட்சியின் 15-வது மாநில மாநாடு நடைபெற்றது. மாநாட்டுக்கு, தந்தை பெரியார் தலைமை வகித்தார். இந்த மாநாட்டில், உயர்கல்வி நிறுவனங்களில் அனைத்து வகுப்பு மக்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என நீதிக்கட்சி ஆட்சியில் அளித்த உத்தரவு நீக்கப்பட்டதற்கு, கடும் கண்டனங்கள் எழுப்பப்பட்டன. மீண்டும் கல்லூரி கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்று மாநாட்டில் வலியுறுத்தினார் பெரியார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131